1969 மார்ச் 4]

திரு. பி. வேலுசாமி : இந்தக் கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களேயும், அதிகாரிகளேயும் ஏப்ரல், மே, மாதங்களில் மாற்றம் செய்தால்தான் அவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்க முடியும். ஆகவே, அப்படிச் செய்வதுதான் சரி என்று அரசாங்கம் கருது றதா ? இடையிலே மாற்றம் செய்வதாக இருந்தால் அந்தந்த ஜில்ல வுக்குள்ளேயே மாற்றச் செய்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டும் நல்லதுதான். இப்பொழுதுகூட ஆண்டுக்கு ஒரு முறைதான் மாறுதல் செய்யப்படுகிறது இடையிலே தேவைப்படுமானுல் சில காரணங்களிஞல் செய்கிறுர்கள். அதில் தவறு இருந்தால் பரிசீலனை செய்கிறுர்கள்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, ஆசிரியர்களை மாற்றுவதுமே மாதத்திற்குள் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, ஆசிரியர்களை நியமிக்கின்ற நேரத்திலும் ஜூன் மாதத்திற்குள்ளே நியமித்துவிட வேண்டும். அப்படியில்லாமல் சில பள்ளிகளிலே காலாண்டுத் தேர்வு வந்த பிறகு நியமிக்கின்ற நிலைமை இருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து தவையான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு சில இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டால் பரிகாரம் காண முயற்சி எடுத்து இருக்கிறேம். ஆனல், பெரும்பாலும் இடையிலே ஆசிரியர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருப்பதுதான் நல்லது.

அலங்காநல்லூர்—பாலமேடு பகுதியில் சுண்ணும்புப் படிவம்

*158 வினு—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், பாலமேடு பகுதியில் சுத்தமான சுண்ணும்புக் கல் கிடைப்பதாகத் தகவல் ஏதேனும் அரசாங்துக்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அப்பகுதியில் எவ்வளவு கிடைக்குமெனக் கணக்கெடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை ஐயா, அந்தப் பகுதியில் 1959–60–ல் இந்தியப் புவியியல் துறையினர் ஆராய்ச்சி நடத்தியதில், சுத்தமான சுண்ணும்புக் கல் கிடைப்பதாகத் தெரியவில்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

Railway lines proposed to be closed.

* 159 *Q.*—Thiru N. KASIRAMAN :
Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether information has been received from the Central Ministry of Railways about the removal of railway lines between Needamangalam and Mannargudi adn Thiruthuraipoondi and Vedaranyam ;

(*b*) whether any intimation has been received from the same Ministry about the removal of any other short distance railway lines in Thanjavur district ;